**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்**

**முன்னிலை : திருமதி.அ.மலர்விழி, M.L.,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**
**தஞ்சாவூர்.**

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21 ஆம் நாள் புதன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2053 – புரட்டாசித் திங்கள் 4 ஆம் நாள்)

**அசல் வழக்கு எண்.13/2021**

**CNR NO.TNTJ010069732020 OS/1706/2020**

மைனர் அமிர்தா அவருக்காக அவரது தாயாரும் பாதுகாவலருமான ஜெயசித்ரா மூலமாக

**......வாதி**

**/எதிர்/**

புகழேந்தி **......பிரதிவாதி**

இவ்வழக்கு, தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் **22.1.2021** அன்று கோப்பில் எடுக்கப்பட்டு, **4.2.2021** அன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வழக்கு **21.9.2022** அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. **S.வெங்கடேசன்** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி ஆஜராவதற்கு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் பிரதிவாதி எதிரவரில்லா நிலையாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும், வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், இவ்வழக்கினை இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

(1) பிரதிவாதி, வாதியின் கணவர் மூலம் பெற்று துர்லாபம் அடைந்த கடன் தொகை ரூ.20,00,000/-ஐ இளவர் அமிர்தாவின் நலனுக்காக திருப்பிக்கொடுக்க உத்தரவிடக்கோரியும், பிரதிவாதி, வாதியின் கணவர் செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள மனையின் முன்புறமாக உள்ள காலிமனையை வேறு எவருக்கும் கிரயம் செய்து கொடுக்காமல், வாதிக்கு முன்னுரிமை வழங்கி கிரயம் செய்து கொடுக்கும்பொருட்டு ஒரு செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கக் கோரியும், வழக்கின் செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார்.

## வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்

(2) பிரதிவாதி, வாதியின் மாமனாரும் இளவர் அமிர்தாவின் பாட்டனாரும் ஆவார். வாதிக்கும், பிரதிவாதியின் மகன் ஜெயபிரபுவிற்கும் 12.2.2016ஆம் தேதி இந்துசமய சாஸ்திர சம்பிரதாயங்களின்படி திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்பு வாதி கருவுற்றார். அவர் கருவுற்ற நேரம் சரியில்லை என கருக்கலைப்பு செய்ய வேண்டுமென்று, பிரதிவாதியும் அவரது மனைவி மற்றும் மூத்தமகள் சாய்சுதா ஆகியோர் வாதியை அடித்து கொடுமைகள் செய்தனர். வாதியின் கணவர் குறுக்கிட்டதால் வாதி காப்பாற்றப்பட்டு இளவர் அமிர்தா 26.10.2016ஆம் தேதி சிசேரியன் முறையில் குறைப்பிரசவமாக பிரசவிக்கப்பட்டார். வாதியின் கணவர் ஜெயபிரபு கடுமையான இதய நோயாளி என்பதை மறைத்து வாதிக்கு திருமணத்தை நடத்தியுள்ளார். வாதியின் கணவர் சீக்கிரம்

இறந்துவிடுவார் என்பதை தெரிந்து வைத்திருந்த பிரதிவாதி ஜெயபிரபு பெயரில் கடன் பெற்று ஏமாற்றிட வேண்டுமென திட்டமிட்டு 5.3.2012ஆம் தேதி புல எண்.26/3, புதிய புல எண்.26/20 ஆகியவற்றில் உள்ள 2400 சதுரடி இடத்தினை செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் ஜெயபிரபுவுக்கு எழுதி வைத்துவிட்டு, பிரதிவாதி ஜெயபிரபுவுடன் கூட்டாக சேர்ந்து BNP பாரிபாஸ் சுந்தரம் பைனான்ஸ் வீட்டுக்கடன் திட்டத்தில் 27.4.2012ஆம் தேதி மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தை கொடுத்து ரூ.8,09,000/- கடன் பெற்றார்கள். 4.10.2012ஆம் தேதி வாதியின் கணவர் முழுகடனையும் கொடுத்து பத்திரத்தை மீட்டுவிட்டார். பிரதிவாதியின் மூத்தமகள் சாய்சுதா வீடு வாங்க பணம் வேண்டும் என்பதால் வாதியின் கணவரிடம் லோன்போட்டு தரும்படி கேட்டார். அதன்படி வாதியின் கணவர் 28.8.2016ஆம் தேதி HDFC வங்கி திருச்சி கிளையிலிருந்து ரூ.15,00,000/- வீட்டுக்கடன் பெற்று பிரதிவாதியின் தஞ்சாவூர் SBI வங்கி கணக்கு எண்.10857583651-க்கு பணத்தை அனுப்பி வைத்ததை பிரதிவாதி தன் மூத்தமகளுக்கு கொடுத்துவிட்டார். சாய்சுதா கடைசியாக 24.1.2019 அன்று ரூ.17,360/- வாதியின் கணவர் வங்கிக் கணக்கிற்கு அனுப்பியுள்ளார். இதுதவிர 31.1.2018ஆம் தேதி வாதியின் கணவர் வங்கி மூலம் டாப்அப் லோன் மூலம் ரூ.5,00,000/- கடனை பெற்று பிரதிவாதி தன் வசம் வாங்கி வைத்துக்கொண்டார். இந்நிலையில் வாதியின் கணவர் 5.3.2019ஆம் தேதி இறந்துவிட்டார். அதன்பின்பு தான் பிரதிவாதி வாதியை ஏமாற்றி மோசடியாக ஜெயபிரபுவை திருமணம் செய்து வைத்த விபரமும், அவர் பெயரில் கடன் வாங்கிய விவரமும் தெரியவந்தது.

வாதியின் கணவர் இறப்புக்கு பின் பிரதிவாதி தன் பெயரில் உள்ள காலிமனையை 18.12.2019 அன்று நில புரோக்கர்களுடன் நேரில் பார்க்க வந்தார். இதன்மூலம் ஜெயபிரபுவிற்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட பத்திரத்தில் உள்ள மனையை பயன்படுத்த முடியாதபடி கெட்ட எண்ணத்தில் செயல்படுகின்றார். எனவே மனையை வாங்கும் முதல் உரிமையை வாதிக்கு கொடுத்து கிரயம் செய்து கொடுக்கும் கடமையும் பொறுப்பும் பிரதிவாதிக்கு உள்ளது. இளவர் அமிர்தாவின் நலனை கருதி பிரதிவாதி வாதியின் கணவரிடம் பெற்ற தொகை ரூ.20,00,000/- வழங்க வேண்டுமென்றும், மனை வாங்கும் முதல் உரிமையை தனக்கு வழங்க வேண்டும் என்றும் 23.12.2019ஆம் தேதி வாதி பிரதிவாதிக்கு தன் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார். அதற்கு பொய்யான காரணங்களை சொல்லி தேதியில்லாத பதில் அறிவிப்பை அனுப்பினார். எனவே பிரதிவாதி வாதியின் கணவர் மூலம் பெற்று துர்லாபம் அடைந்த கடன் தொகை ரூ.20,00,000/-ஐ இளவர் அமிர்தாவின் நலனுக்காக திருப்பிக்கொடுக்க உத்தரவிடக்கோரியும், பிரதிவாதி, வாதியின் கணவர் செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள மனையின் முன்புறமாக உள்ள காலிமனையை வேறு எவருக்கும் கிரயம் செய்து கொடுக்காமல், வாதிக்கு முன்னுரிமை வழங்கி கிரயம் செய்து கொடுக்கும்பொருட்டு ஒரு செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கக் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(3) பிரதிவாதிக்கு நாளிதழில் அறிவிப்பு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் பிரதிவாதி எதிரவரில்லா நிலையாக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 9 வரையான

சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன.

(4) **தீர்விற்குரிய பிரச்சினை** :

இவ்வழக்கு அனுமதிக்கதக்கதா? என்பதேயாகும்.

**(5) தீர்வு**

வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வாதி தன் வழக்குரையில், பிரதிவாதி வாதியின் மாமனாரும், இளவர் அமிர்தாவின் பாட்டனாரும் ஆவார் என்றும், வாதிக்கும், பிரதிவாதியின் மகன் ஜெயபிரபுவிற்கும் 12.2.2016ஆம் தேதி இந்துசமய சாஸ்திர சம்பிரதாயங்களின்படி திருமணம் நடைபெற்று திருமணத்திற்கு பின்பு வாதி கருவுற்ற நேரம் சரியில்லை என கருக்கலைப்பு செய்ய வேண்டுமென்று, பிரதிவாதியும் அவரது மனைவி மற்றும் மூத்தமகள் சாய்சுதா ஆகியோர் வாதியை அடித்து கொடுமைகள் செய்ததாகவும், வாதியின் கணவர் குறுக்கிட்டதால் வாதி காப்பாற்றப்பட்டு இளவர் அமிர்தா 26.10.2016ஆம் தேதி சிசேரியன் முறையில் குறைப்பிரசவமாக பிரசவிக்கப்பட்டதாகவும், வாதியின் கணவர் ஜெயபிரபு கடுமையான இதய நோயாளி என்பதை மறைத்து வாதிக்கு திருமணத்தை நடத்தியுள்ளதாகவும், பிரதிவாதி ஜெயபிரபு பெயரில் கடன் பெற்று ஏமாற்றிட வேண்டுமென திட்டம் போட்டு 5.3.2012ஆம் தேதி புல எண்.26/3, புதிய புல எண்.26/20 ஆகியவற்றில் உள்ள 2400 சதுரடி இடத்தினை செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் ஜெயபிரபுவுக்கு எழுதி வைத்துவிட்டு, பிரதிவாதி ஜெயபிரபுவுடன் கூட்டாக சேர்ந்து BNP பாரிபாஸ் சுந்தரம் பைனான்ஸ் வீட்டுக்கடன் திட்டத்தில்

27.4.2012ஆம் தேதி மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தை கொடுத்து ரூ.8,09,000/- கடன் பெற்றதாகவும், 4.10.2012ஆம் தேதி வாதியின் கணவர் முழுகடனையும் கொடுத்து பத்திரத்தை மீட்டுவிட்டதாகவும், பிரதிவாதியின் மூத்தமகள் சாய்சுதா வீடு வாங்க வாதியின் கணவர் 28.8.2016ஆம் தேதி HDFC வங்கி திருச்சி கிளையிலிருந்து ரூ.15,00,000/- வீட்டுக்கடன் பெற்று பிரதிவாதியின் தஞ்சாவூர் SBI வங்கி கணக்கு எண்.10857583651-க்கு பணத்தை அனுப்பி வைத்ததை பிரதிவாதி தன் மூத்தமகளுக்கு கொடுத்துவிட்டதாகவும், சாய்சுதா கடைசியாக 24.1.2019 அன்று ரூ.17,360/- வாதியின் கணவர் வங்கிக் கணக்கிற்கு அனுப்பியுள்ளதாகவும், இதுதவிர 31.1.2018ஆம் தேதி வாதியின் கணவர் வங்கி மூலம் டாப்அப் லோன் மூலம் ரூ.5,00,000/- கடனை பெற்று பிரதிவாதி தன் வசம் வாங்கி வைத்துக்கொண்டதாகவும், வாதியின் கணவர் 5.3.2019ஆம் தேதி இறந்துவிட்ட பின்புதான் பிரதிவாதி வாதியை ஏமாற்றி மோசடியாக அவரது நோயாளி மகனுக்கு திருமணம் செய்து வைத்த விபரமும், அவர் பெயரில் கடன் வாங்கிய விவரமும் தெரியவந்ததாகவும், வாதியின் கணவர் இறப்புக்கு பின் பிரதிவாதி அவரது பெயரில் உள்ள காலிமனையை 18.12.2019 அன்று நில புரோக்கர்களுடன் நேரில் பார்க்க வந்ததாகவும், இதன்மூலம் ஜெயபிரபுவிற்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட பத்திரத்தில் உள்ள மனையை பயன்படுத்த முடியாதபடி கெட்ட எண்ணத்தில் செயல்படுகின்றார் என்றும், எனவே மனையை வாங்கும் முதல் உரிமையை வாதிக்கு கொடுத்து கிரயம் செய்து கொடுக்கும் கடமையும் பொறுப்பும் பிரதிவாதிக்கு உள்ளதாகவும், இளவர் அமிர்தாவின்

நலனை கருதி பிரதிவாதி வாதியின் கணவரிடம் பெற்ற தொகை ரூ.20,00,000/- வழங்க வேண்டுமென்றும், மனை வாங்கும் முதல் உரிமையை தனக்கு வேண்டும் என்றும் 23.12.2019ஆம் தேதி வாதி பிரதிவாதிக்கு தன் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றும், அதற்கு பொய்யான காரணங்களை சொல்லி தேதியில்லாத பதில் அறிவிப்பை அனுப்பினார் என்றும், எனவே பிரதிவாதி வாதியின் கணவர் மூலம் பெற்று துர்லாபம் அடைந்த கடன் தொகை ரூ.20,00,000/- ஐ இளவர் அமிர்தாவின் நலனுக்காக திருப்பிக்கொடுக்க உத்தரவிடக்கோரியும், பிரதிவாதி, வாதியின் கணவர் செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள மனையின் முன்புறமாக உள்ள காலிமனையை வேறு எவருக்கும் கிரயம் செய்து கொடுக்காமல், வாதிக்கு முன்னுரிமை வழங்கி கிரயம் செய்து கொடுக்கும்பொருட்டு ஒரு செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கக் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். வழக்குரையை அனுசரித்து வாதி வா.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார்.

(6) வாதி தரப்பில், திருமண அழைப்பிதழ் அசல் வா.சா.ஆ.1ஆகவும், இளவர் அமிர்தாவின் பிறப்புச் சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 5.3.2012 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், ஜெயபிரபு பெயரில் உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி பாஸ்புத்தகத்தின் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், ஜெயபிரபு பெயரில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் உள்ள வங்கி கணக்கு பட்டியல் நகல் வா.சா.ஆ.5 ஆகவும், ஜெயபிரபுவின் இறப்புச் சான்றிதழ் அசல் வா.சா.ஆ.6 ஆகவும், வாதி வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு

அனுப்பிய அறிவிப்பின் நகல் வா.சா.ஆ.7 ஆகவும், பிரதிவாதி வழக்கறிஞர் வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.8 ஆகவும், ஜெயபிரபு பெயரில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் உள்ள வங்கி கணக்கு பட்டியல் நகல் வா.சா.ஆ.9 ஆகவும் குறியிடப்பட்டுள்ளன. பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததால், பிரதிவாதி எதிரவரில்லா நிலையாக்கப்பட்டுள்ளார்.

(7) வாசாஆ 5 வங்கி கணக்கு விபரத்தை பரிசீலிக்கையில், 30.08.2016ம் தேதியில் காசேலை எண் 140309ன் படி ரூ.15,00,000/- வாசா1ன் கணவர் ஜெயபிரபுவின் வங்கி கணக்கிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது என்பதும், பிரதிவாதி புகழேந்தியின் வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும் அதை பிரதிவாதி 30.08.2016ம் தேதியில் ரூ.9,00,000/- 31.08.2016ம் தேதியில் ரூ.6,00,000/- ஐயும் எடுத்துள்ளார் என்பதும் அறியமுடிகிறது. இதற்கு ம.சா.ஆ.8 பதில் அறிவிப்பில் பிரதிவாதி கொடுத்துள்ள விளக்கம் நம்பும்படியாக இல்லை. எனவே, பிரதிவாதி, வாதியின் வழக்கை மறுத்து கட்சி செய்யாமல் எதிரவரில்லா நிலையாகியுள்ளதாலும் வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் 9 வரையான சான்றாவணங்கள் வாதியின் வழக்கை உறுதி செய்வதாலும், வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வாதியின் வழக்கு நம்பத்தகுந்ததாகவும் ஏற்கத்தகுந்ததாகவும் அமைந்துள்ளது. எனவே, வாதி கோரியபடி ரூ.20,00,000/- பிரதிவாதி, வாதிக்கு திருப்பி கொடுக்க உத்தரவிடக்கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதென நீதிமன்றம் முடிவு செய்கிறது. கிரய முன்னுரிமை குறித்த பரிகாரம் குறித்து பரிசீலிக்கையில், இவ்வழக்கில் கண்ட சொத்து பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து

என்பதால் அந்த சொத்து பொறுத்து யாருக்கு வேண்டுமானாலும் கிரயம் கொடுக்க பிரதிவாதிக்கு உரிமையுள்ளது என்பதால் வாதிக்கு வழக்கு சொத்தை பொறுத்து கிரய முன்னுரிமை பரிகாரம் கிடைக்கதக்கதல்ல எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, வாதியின் வழக்கு பகுதியாக அனுமதிக்கதக்கதென இப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வுகாண்கிறது.

(8) முடிவாக, எதிரவரில்லா நிலையில் வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு, பிரதிவாதி ரூ.20,00,000/-ஐ, திருப்பிக்கொடுக்க வேண்டுமென தீர்ப்பளிக்கப்படுகிறது. வாதி கோரிய கிரய முன்னுரிமை குறித்த செயலுறுத்து கட்டளை பரிகாரம் பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2022ஆம் ஆண்டு **செப்டம்பர் திங்கள் 21ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

**(ஒ-ம்) அ. மலர்விழி**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**

**தஞ்சாவூர்.**

**<u>வாதி தரப்பு சாட்சி</u>**

வா.சா.1 ஜெயசித்ரா

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.2.2016 | ஜெயசித்ராவிற்கும் ஜெயபிரபுவிற்கும் நடந்த திருமண அழைப்பிதழ் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.2 | 27.4.2017 | இளவர் அமிர்தாவின் பிறப்புச் சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.3 | 5.3.2012 | ஜெயபிரபுவிற்கு பிரதிவாதி புகேழந்தி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | .................... | ஜெயபிரபு பெயரில் உள்ள வங்கி பாஸ்புத்தகத்தின் அசல் |
| வா.சா.ஆ.5 | ................... | ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் ஜெயபிரபு பெயரில் உள்ள வங்கி கணக்கு பட்டியல் உண்மை நகல் |
| வா.சா.ஆ.6 | 7.12.2019 | ஜெயபிரபுவின் இறப்புச் சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.7 | 23.12.2019 | வாதி வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் நகல் |
| வா.சா.ஆ.8 | ............... | பிரதிவாதி வழக்கறிஞர் வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் |
| வா.சா.ஆ.9 | ................. | ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் ஜெயபிரபு பெயரில் உள்ள வங்கி கணக்கு பட்டியல் உண்மை நகல் |

**(ஒ-ம்) அ. மலர்விழி**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**

**தஞ்சாவூர்.**

**தீர்ப்புரை**

**அசல் வழக்கு எண்.13/2021**

**நாள். 21.9.2022**